பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 20 வியாழக்கிழமை (02-04-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 127

# இரு பொலீஸ் நிலையங்கள் மீது கிழக்கில் புலிகள் திடீர்த் தாக்குதல்

## ஒரே நாளில் துணிகரச் சம்பவங்கள்

கொழும்பு, ஏப்ரல் 2

கிழக்கில் இரு பொலீஸ் நிலையங்கள் மீது விடுதலைப் புலிகள் போராளிகள் நேற்றுத் திடீர்த் தாக்குதல்களை நடத்தினர்.

வாழைச்சேனை, காத்தான்குடி பொலீஸ் நிலையங்கள் மீதே புலிகள் அதிரடித் தாக்குதல்களை நடத்தினர். புலிகளின் இந்தத் துணிகரத் தாக்குதல்கள் ஒரே நாளில் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

வாழைச்சேனை பொலீஸ் நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இன்ஸ்பெக்டர் ஒருவரும், எட்டுப் பொலீஸாரும் படுகாயமடைந்தனர் என்றும் —

காத்தான்குடித் தாக்குதல் குறித்து மேலதிக விவரம் ஏதும் கிடைக்கவில்லை என்றும்—கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கிழக்குப் பகுதி தமது படையினரின் பூரண கட்டுப்பாட்டில் உள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் அடிக்கடி கூறி வருகின்றன. ஆனால் விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய துணிகரமான தாக்குதல்கள் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி இருப்

[6 ஆம் பக்கம் பார்க்க)

## பணப்புழக்கம் சீர்குலைவு; வங்கியில் பணப் பற்றாக்குறை

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ்ப்பாண மாவட்டத்தில் பணப் புழக்கம் பெருமளவில் சீர்குலைந்துள்ளது. அதனால் வங்கிக் கொடுப்பனவுகள் மற்றும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளை வழங்க முடியாத நிலை வங்கிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

பணப் புழக்கம் சீர்கெட்டு விட்டதால், வங்கிகள் தமது வாடிக்கையாளர்களுக்கு குறைந்த பணத் தொகைகளையே அவர்களது கணக்கில் இருந்து வழங்குகின்றன. இதனால் புதுவருடப் பிறப்பை ஒட்டிய செலவுகளுக்கு பணம் இல்லாமல் மக்கள் கஷ்டமுற வேண்டியுள்ளது.

இது குறித்து அரச வங்கி ஒன்றின் உயர் அதிகாரியிடம் வினவியபோது அவர் பணப் புழக்கம் குறைவதற்கான பின்னணியைப் பின்வருமாறு விளக்கினார்:—

யுத்தம் தொடங்கிய சில மாதங்களில் உண்டான பெரும் பணப் புழக்கச் சீர்குலைவைத் தொடர்ந்து, அரச வங்கிகளுக்கு மாதாந்தம் ஐந்து கோடி ரூபாவை கப்பல் மூலம் கொழும்பிலிருந்து எடுத்து வர ஏற்பா

[6 ஆம் பக்கம் பார்க்க]

## முச்சந்தி முரளி



ஆளைவிட்டால் போதும் என்ற நிலைக்கு ஆளுநரும் வந்துவிட்டாரோ......

## மத்திய வங்கியின் ஆளுநர் விரைவில் ராஜினாமா?

கொழும்பு, ஏப். 2

மத்திய வங்கியின் ஆளுநர் நெவில் கருணாதிலக்க தமது பதவியை விரைவில் ராஜினாமாச் செய்யக் கூடும் என்று அரச சார்பு பத்திரிகையான ''ஒப்சேர்வரில்'' நேற்று செய்தி வெளியாகி இருந்தது.

தங்கக் கொள்வனவில் தனியார் துறையினர் கொடுக்கும் விலையை விட கூடுதல் விலை கொடுத்து திரு. கருணாதிலக்க கொள்வனவு செய்துள்ளார் என்றும்—

அதனால் அவர் உடனடியாக பதவி நீக்கம் செய்யப்படவேண்டும் என்றும்—அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

''ஒப்சேர்வர்'' பெரும்பாலும் அரசினர் கருத்தை பிரதிபலிக்கும் பத்திரிகை என்பதால் திரு. கருணாதிலக்க முந்திக்கொண்டு தாமாகவே தமது பதவியை இராஜினாமா செய்யக் கூடுமென அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

இதேசமயம்—

பிரபல வங்கியாளர் திரு. என். யு. ஜெயவர்த்தனாவின் புதல்வி ஒருவர், மத்திய வங்கி ஆளுநர் டாக்டர் கருணாதிலகாவுக்கு எதிராக நுவரெலியா

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பரீட்சை நடக்கும் பகுதியில் தாக்குதல் இல்லையாம்

கொழும்பு, ஏப் 2

வடக்கு மாகாணத்தில் ஜீ. சி. ஈ. (உயர்தரம்) விசேட பரீட்சை நடைபெறும் பகுதிகளுக்கு அருகே தாக்குதல் நடத்தப்போவதில்லை.

இப்படி இராணுவம் அறிவித்திருப்பதாக ஏஜென்சி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாண மாவட்டத்துக்கு புதிதாக 11 அரச அதிபர்கள்

### விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு விரைவில் பதினொரு அரசாங்க அதிபர்கள் நியமிக்கப்படுவர்.

புதிய அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தின் கீழ் இம் மாவட்டத்தில் இப்போது பதினான்கு மினிக் கச்சேரிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

இவற்றில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சாவகச்சேரி தவிர்ந்த ஏனைய பதினொரு மினிக் கச்சேரிகளுக்குமே அரசாங்க அதிபர்கள் புதிதாக நியமிக்கப்பட உள்ளனர்.

அதிகாரப் பரவலாக்கப்பட்ட புதிய நிர்வாக முறையின் கீழ் ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்கள் மினிக் கச்சேரிகளாகத் தரம் உயர்த்தப்பட்டது தெரிந்ததே.

அவற்றில் 238 மினிக் கச்சேரிகளுக்கு அரசாங்க அதிபர

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தாக்குதல் நடத்திய படகுகள் புலிகளினால் விரட்டியடிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2

முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் கடற்பிரதேசத்தில் இருந்து கரையோரப் பகுதியை நோக்கி தாக்குதல் நடத்திய நான்கு பீரங்கிப் படகுகளை விடுதலைப் புலிகள் விரட்டி அடித்தனர்.

நேற்றுக் காலை இச்சம்பவம் நடந்தது.

சுமார் அரைமணி நேரமாக இந்தப் படகுகள் குடியிருப்புக்களை இலக்கு வைத்துக் கடலில் இருந்து தாக்குதலை நடத்தின என்றும் —

அதனை அடுத்து விடுதலைப் புலிகளின் படையணி ஒன்று படகுகள் மீது எதிர்த் தாக்குதல் நடத்தி அவற்றைப் பின்வாங்கச் செய்தது என்றும் —

சுமார் 45 நிமிட நேரம் அந்தப் பகுதியில் கடும் மோதல்கள் இடம்பெற்றன என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது. [இ-5]

## புதிதாக 6 கிராமங்களில் சிங்களக் குடியேற்றம்

திருகோணமலையில் புதிதாக ஆறு தமிழ்க்கிராமங்களில் சிங்களவர்களைக் குடியேற்றும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருப்பதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

திருகோணமலை மாவட்ட அரச அதிபரும். உதவி அரச அதிபர்களும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் என்றும் சொல்லப்படுகிறது.

பாலம்போட்டாறு, இறால்குழி, உப்பாறு, ஆலங்கேணி, கன்னியா, ஈச்சந்தீவு ஆகிய தமிழ்க்கிராமங்களிலேயே சிங்களவர்களைக் குடியமர்த்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. ]இ 5]

## பாதயாத்திரை நேற்று கதிர்காமத்தில் பூர்த்தி

அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நடத்திய 18 நாள் பாத யாத்திரை நேற்று கதிர்காமம் முருகன் திருத்தலத்தில் முடிவடைந்தது.

காணாமல் போனவர்களின் உறவினர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்ட யாத்திரை நேற்று மேளதாள மணிகளுடனும், அரசுக்கு எதிரான சுலோகங்களுடனும் முடிவடைந்தது என்றும்—

இந்த ஊர்வலம் பெரும் வெற்றி என்றும்.

அரசுக்கு எதிர்ப்பைக்காட்ட மக்கள் அஞ்சவில்லை என்பதை ஊர்வலம் எடுத்துக்காட்டுவதாகவும்—

பாதயாத்திரையை ஏற்பாடு செய்திருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பியான மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். [இ-5]

## லிபியா மீது தடைகள்! ஐ. நா. சபையில் தீர்மானம்

நியூயோர்க், ஏப். 2

லிபியா மீது விமானப் போக்குவரத்து மற்றும் ஆயுதத் தடைகளை விதிக்கும் தீர்மானம் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேறியுள்ளது.

தீர்மானத்துக்கு ஆதரவாக 10 நாடுகள் வாக்களித்தன. 5 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

இரண்டு மேற்கத்திய விமானங்கள் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்ட சம்பவங்களில் தொடர்புடைய இரண்டு

[6 ஆம் பக்கம் பார்க்க]

## கிராமசேவையாளர் பதவிக்கு விண்ணப்பித்தோர் விவரம்

### மாகாண சபை கோருகிறது

''கிராமசேவையாளர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களின் விவரங்களை எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் மாகாண சபைக்கு அனுப்ப வேண்டும். இல்லையேல் அவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டா''

இப்படியான அறிவுறுத்தலை வடக்கு — கிழக்கு மாகாணசபை நேற்று யாழ். செயலகத்துக்கு அனுப்பியுள்ளது.

யாழ். மாவட்டத்தில் வெற்றிடமாகவுள்ள 118 கிராம சேவையாளர் பதவிகளுக்கு இரண்டாயிரத்து 500 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

கிராம சேவையாளர்களுக்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி நாடெங்கும் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-3)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தென்னிலங்கை குழுக்களுடன் புலிகள் பேசிப் பயனில்லையாம்

## இராணுவ அதிகாரி கூறுகிறார்

தென்னிலங்கையிலிருந்து செல்லும் தூதுக் குழுக்களுடன் விடுதலைப் புலிகள் பேசிப் பயன் இல்லை. விடுதலைப் புலிகள் உண்மையாகவே சமாதானத்தை விரும்பினால் ஆயுதங்களைக் கீழே வைத்து விட்டுப் பேச்சுவார்த்தைக்கு வரட்டும்.

சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் மேற்கண்டவாறு தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று கூறுகிறது.

யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளைச் சந்தித்து விட்டு வரும் மத குருக்கள் அல்லது வேறு குழுக்கள், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான கடைசிச் சந்தர்ப்பம் இது தான் என்று எமக்கு யோசனை தெரிவிக்கலாம்.

அப்படி அவர்கள் யோசனை கூறுவதில் எதுவித பயனும் இல்லை. ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு நாங்கள் புலிகளைக் கேட்கிறோம். ஆனால் அவர்கள் அதற்கு இணங்கமாட்டார்கள்.

அந்த அதிகாரி மேலும் இப்படித் தெரிவித்ததாக அச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. [இ-த]


## சூழலை பாதுகாப்போம்!!

உங்கள் பங்களிப்பு -
எமது பிரதேசத்தின் செழிப்பு

★ நீர் பாவனையில் சிக்கனம் ★

ஆலோசனை :- வீட்டின் சகல தேவைகளுக்கும் குழாய் நீர் பாவிக்கவும்.

சேவை:- ஒரு மாதத்திற்கு மூன்று முறை உங்கள் தண்ணீர்த் தொட்டியை நிரப்புவதற்கு

ரூபா 550 மட்டுமே
(யாழ் மாநகர எல்லைக்குள் மட்டும்)

தொடர்பு கொள்ளவும்;
6, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

[4605]



## சீமாட்டி
## புதுவருட மலிவு விற்பனை

எமது வாடிக்கையாளர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!
என்றுமில்லாதவாறு விலை குறைப்பு!!
தவறாது பயன்படுத்துங்கள்!!!

★ சைனா சீத்தை
★ தாறிகா வோயில் சாறி வகைகள்
★ உறையூர் பருத்திச் சேலைகள்
★ மாட்டின், ஜோன் கூப்பர் சேட் வகைகள்

இன்னும் பல ஜவுளி ரகங்கள்!

சீமாட்டி ரெக்ஸ்ரைல்ஸ்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(4603)



## Computer Programming in BASIC Language

4 மாதங்கள்
திங்கள், புதன் வகுப்புகள்
ஆரம்பம்: 06 — 04 — 1992 10-30 மணி

Lectures by: S. P. Sivapathasundaram
M. I. D. P. M. (Lond.)

★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

**School of Business Administration**
(Pioneers in Computer Education),
16, 3rd Cross Street, Jaffna.

[சி-1812]


## இன்று

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ். பல்கலைக்கழக அனைத்துப் பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குமான பொதுக்கூட்டம் ஒன்று இன்று வியாழன் பிற்பகல் 4 மணிக்கு கைலாசபதி அரங்கில் இடம்பெறும் என மாணவரவை அறிவித்துள்ளது. [ஓ]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப். 2

''அரசியல் நிகழ்வு மற்றும் போக்குகளுடன் சமகால அமெரிக்கக் கவிதையின் அம்சங்கள்'' என்னும் தலைப்பிலான ஆய்வுரை இன்று வியாழன் பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக புவியியற்றுறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். பல்கலைக்கழக ஆங்கில மன்றத்தின் ஆதரவில் நடைபெறும் இந்த வைபவத்தில் கலாநிதி றோபேட் போட்டார் ஆய்வுரை நிகழ்த்துவார். [இ-5]

## உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், ஏப். 2

தியாகதீபம் அன்னை பூபதியின் நான்காவது ஆண்டு நினைவு தொடர்பாக இடம்பெற்று வரும் உண்ணாவிரதமும், நினைவுக் கருத்தரங்கும் இன்று சண்டிலிப்பாய் - விளான் சந்தியில் நடைபெறும்.

சுடர், மதிவாணி, மகாதேவன் மாஸ்டர் ஆகியோர் கருத்துரை வழங்குவர். [த]

## துறைமுக புனரமைப்புக்கு மேலும் சிமெந்து

யாழ்ப்பாணம், ஏப். 2

பருத்தித்துறை துறைமுகத்தை புனரமைத்து விஸ்தரிக்க மேலும் 200 பைக்கட் சிமெந்தை அனுப்ப கூட்டுப் படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இது குறித்து கொழும்பில் இருந்து தகவல் அனுப்பி உள்ளார்.

இந்த சிமெந்தில் முதலில் 100 பைக்கட் குமாரி கப்பலில் அனுப்பப்படும்.

ஏற்கனவே 50 பைக்கட் சிமெந்து இந்த வேலைக்கு வழங்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. [இ-3]

## இன்று தபால் விநியோகம்

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ்-நகர பகுதியில் இன்று வெளியூர் தபால் விநியோகம் இடம்பெறும.

'லில்லி' கப்பலில் எடுத்து வரப்பட்ட 168 தபால் பொதிகளும் நேற்று யாழ். பிரதம தபாலகத்திற்கு எடுத்து வரப்பட்டன.

தபால்களைத் தரம்பிரித்து விநியோகிக்கும் வேலைகள் இன்று முதல் நடைபெறும் என யாழ். பிரதம தபால் அதிபர் திரு. ஆ. மயில்வாகனம் தெரிவித்தார்.

நகருக்கு வெளியே உள்ள உப தபாலகங்களுக்குரிய பொதிகளும் இன்று அனுப்பி வைக்கப்படவுள்ளன. (இ-5)

## நெசவு நூலுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஏப் 2

யாழ். மாவட்ட நெசவுக் கைத்தொழிலில் ஈடுபட்டு இருப்போருக்கான நூல் மற்றும் தறிவகைகள் ஆகியவற்றை கொழும்பில் இருந்து எடுத்துவர கூட்டுப்படைகள் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். அரச அதிபர் நடத்திய பேச்சுக்களை அடுத்து அந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக நேற்று செயலகத்துக்கு தகவல் கிடைத்தது.

இந்த நூல் வகைகள் எடுத்துவர [illegible] ஏராளமான தொழிலாளர்கள் வேலை இழந்திருந்தனர். [இ-3]

# விபுலானந்தரின் வாழ்வும் போராட்ட உணர்வு மிக்கதே!

## நூல் அறிமுக விழாவில் யோகி

வடமராட்சி, ஏப். 2

விபுலானந்தரின் இந்த நூலைப் படிக்கும்போது அவர் எமது அணியைப் போல் மூன்றாவது படை அணியாக இருந்திருக்கின்றார். அவரது வாழ்க்கையும் போராட்ட உணர்வு மிகுந்ததாகக் காணப்படுகிறது.

''யாழ்ப்பாண சமூக உருவாக்கமும் விபுலானந்தரும்'' என்ற நூலின் அறிமுக ஆய்வரங்கில் உரையாற்றும் போது, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலதிபர் திரு யோகரட்ணம் யோகி இவ்வாறு கூறினார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மகா வித்தியாலயத்தில் ஹாட்லிக் கல்லூரி அதிபர் திரு. பொ. பாலசிங்கம் தலைமையில் இந்த வைபவம் இடம்பெற்றது.

திரு யோகி தொடர்ந்து அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:-

விபுலானந்தரின் இந்நூலும் வடக்கு-கிழக்கை இணைத்திருக்கிறது. இந்த நூல் பார்க்காததை பார்ப்பதையும், விரும்பாததை வெளிக்கொணர்ந்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

உலகத்திலே இனிமையான மொழி தமிழ். அதை உரிய முறையில் பயன்படுத்தி வேற்று மொழிகளுடன் கலந்து தமிழ் மொழியை அழித்துவிடாமல் வளர்க்க வேண்டும். தமிழிலே சிறப்பாக இருக்கின்ற மறைந்த, மறைக்கப்பட்ட, அழகான, அர்த்தமுள்ள சொற்களை வெளிக்கொணர வேண்டும்—

இவ்வாறு அவர் சொன்னார்.

எழுத்தாளர் தெணியான், பலாலி பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. ஆர். எஸ். நடராசா, நூலாசிரியர் திரு. கௌரிகாந்தன் ஆகியோரும் அறிமுக ஆய்வுரைகளை நிகழ்த்தினர்.

உடுப்பிட்டி கொத்தணி அதிபர் திரு. என். அனந்தராஜ் வரவேற்புரையாற்றினார். (ஓ-165]

## புதிய அமெரிக்க தூதர்

கொழும்பு, ஏப். 2

இலங்கைக்கான அமெரிக்கத் தூதராக திருமதி ரெற சிற்றா ஷாபர் நியமிக்கப்படவிருக்கின்றார் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]


வடமாகாண தெங்கு - பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணிகளின் சந்தைப்படுத்தல் மையத்திற்கான

## ஆட்சேர்ப்பு விளம்பரம்

**1. நிர்வாகச் செயலாளர்:**

தகைமை:
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றின் பட்டதாரியோ அல்லது அதற்குச் சமனான கல்வித் தகைமையுடையவரும், காரியாலய முகாமைத்துவப் பயிற்சியும் ஐந்து வருடத்திற்குள் குறையாத அனுபவமும் உடையவர்.

சம்பளம்:
சகல படிகளும் உட்பட தகைமைகளுக்கேற்ப ரூ. 3,000/-க்கு குறையாது பேசித் தீர்க்கப்படும்.

**2. சந்தைப்படுத்தல் முகாமையாளர்;**

தகைமை:
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றின் பட்டதாரியும், மாதம் 25 லட்சத்திற்குக் குறையாத வியாபாரச் சுழற்சியுள்ள நிறுவனமொன்றில் ஐந்து வருடத்திற்குக் குறையாத சந்தைப்படுத்தல் அனுபவமும் உள்ளவர்.

சம்பளம்:
சகல படிகளும் உட்பட கோரப்படும் தகுதியைக் கொண்டிருக்கும் அடிப்படையில், ரூபா 5,000/- க்கு குறையாமல் வழங்கப்படும்.

**3. மொத்தக் களஞ்சியப் பொறுப்பாளர்:**

தகைமை:
க. பொ. த. உயர்தர சித்தியுடன் மாதாந்தம் ரூபா இருபது லட்சம் சுழற்சிக்குக் குறையாத வர்த்தக ஸ்தாபனமொன்றில் களஞ்சியப் பொறுப்பாளர் பதவியில் 5 வருடத்திற்குக் குறையாத அனுபவம் உடையவர்.

சம்பளம்:
தகைமைகளுக்கமைய சகல படிகளும் உட்பட 2,000/-க்கும் ரூ. 3,000/- க்கும் இடையில் பேசித் தீர்க்கப்படும்.

**விசேட குறிப்பு:**
இப் பதவி யாழ். குடா நாடு முழுவதும் உள்ள சந்தைப்படுத்தல் நடவடிக்கையுடன் வெளிக்களக் கடமையைக் கொண்டிருப்பதால், அதற்கேற்ற உடல் வாகும், மனப்பக்குவமும் உள்ளவர்களிடமிருந்தே விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது. மதுபானம் அருந்தும் பழக்கமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படவில்லை. 2ஆம், 3ஆம் பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பிணை கட்டத் தயாராயிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் அனைவரும் கல்விச் சான்றிதழ்களுடனும், ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களுடனும் 12-04-1992 ஞாயிறு காலை 9-00 மணிக்கு 499, காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள எமது காரியாலயத்திற்கு சமூகம் தரவும்.

பொது முகாமையாளர்,
வடமாகாண தெ. ப. பொ. கூ.
சங்கங்களின் சமாசம்,
யாழ்ப்பாணம்.

சி-1759]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லுண்டாய், செம்மணி பகுதிகளில் பாரிய உப்பளங்கள் அமைக்கப்படும்

## அரச அதிபர் மூலம் நிதி பெறவும் முயற்சி

யாழ்ப்பாணம், ஏப். 2

குடாநாட்டில் பாரிய அளவில் உப்பளங்கள் அமைக்கப்பட்டு, உப்பு விளைச்சலைப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக கல்லுண்டாய், செம்மணிப் பகுதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த இரு உப்பளங்களும் அமைக்கப்பட்டு திட்டம் வெற்றியீட்டினால் குடாநாட்டு மக்களின் தேவைக்கும் மேலதிகமான உப்பைப்பெற முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உப்பளங்கள் அமைக்கும் திட்டத்துக்கு வரவு — செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதியில் இருந்து நிதியுதவி பெறவும் யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கல்லுண்டாயில் 30 லட்சம் ரூபா செலவில் நவீன முறையில் உப்பளங்கள் அமைப்பதற்கான திட்ட அறிக்கை ஒன்றும் அரச அதிபரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

செம்மணிப் பகுதியிலும் விசால உப்பளங்கள் அமைக்கப்பட்டு, உப்பு விளைச்சலைப் பெருக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதுசம்பந்தமான திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா தலைமையில் அமைக்கப்பட்டுள்ள குழு ஒன்று உப்பளங்கள் தொடர்பான ஆய்வு அறிக்கைகளை தயாரித்துள்ளது. (ஒ-3)

## வெளியுறவு பொறுப்பும் ராவ் வசம்

புதுடில்லி ஏப். 2

இந்திய வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி ராஜினாமாச் செய்ததை அடுத்து, அவரது அமைச்சுப் பொறுப்பை பிரதமர் நரசிம்மராவ் ஏற்றுள்ளார்.

இதேவேளை — பிரதமரின் சிபாரிசின் மீது திரு. மாதவ்சிங் சோலங்கியின் ராஜினாமாவை ஜனாதிபதி வெங்கட்ராமன் ஏற்றுக் கொண்டார் என்றும் அறிவிக்கப்படுகிறது. [ஒ-எ]

## ஓய்வூதிய வவுச்சர்கள்

யாழ்ப்பாணம், ஏப். 2

மார்ச் மாதத்துக்குரிய ஓய்வூதிய வவுச்சர்களும், காசோலைகளும் யாழ் செயலகத்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. [ஒ-100]

## இராணுவ அதிகாரி உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 2

பூநகரி, கறுக்காய்த்தீவுப் பகுதியில் கடந்த சனிக்கிழமை புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டாவது லெப்டினன்ட் தரத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவரே இறந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இவர் கண்டியைச் சேர்ந்தவராவார் (ஒ-எ)

## வெள்ளை அரிசி, மா கட்டுப்பாட்டு விலையில்!

வண்ணார்பண்ணை, ஏப். 2

உணவு ஆணையாளரின் கட்டுப்பாட்டு விலையின் அடிப்படையில் வெள்ளை அரிசி, மா என்பன தனியார் வியாபாரிகளுக்கும் மொத்தமாக வழங்கப்படும்.

யாழ் செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் இதனைத் தெரிவித்தார்

கட்டுப்பாட்டு விலையில் அரிசி, மா என்பன மக்களுக்குக் கிடைப்பதற்காக அவற்றைத் தனியார் வியாபாரிகளுக்கும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் —

மேற்படி பொருள்களை மொத்தமாகத் தம்மிடம் பெற்று விற்பனை செய்ய விரும்பும் வர்த்தகர்கள் யாழ் செயலக புனர்வாழ்வுப் பிரிவுக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்தார்.

(த-5-ரி)

## கொழும்பில் நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஏப். 2

உள்ளூராட்சி சேவை, நிர்வாக சேவை வகுப்பு IIக்கு, முதுமுறை அடிப்படையில் தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் [சனிக்கிழமை] கொழும்பில் நடைபெறவுள்ளது. [ஒ]

## தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ். மாவட்டத்தில் விசர் நாய்க்கடியினால் பாதிக்கப்படும் மக்களை மரணத்திலிருந்து காப்பாற்ற. யாழ். மாவட்டத்துக்குத் தேவையான விசர் நாய்த் தடுப்பு மருந்துகளை உடனடியாக அனுப்பி வைக்க ஆவன செய்தல் வேண்டும் —

இவ்வாறு அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் ஒன்று யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

விசர்நாய்க்கடி தொடர்பாக யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் கடந்த திங்கட்கிழமை ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கிலேயே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

## தொண்டர் ஆசிரியர் நியமனம்: பகிரங்க விசாரணைக்கு ஆணைக்குழு அறிவுறுத்தல்

''தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பான விசாரணை பகிரங்கமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.''

இப்படியான அறிவுறுத்தல் ஒன்று யாழ். கல்வி அலுவலகத்துக்கு நேற்று முன்தினம் வந்து சேர்ந்தது.

கல்விச் சேவைகள் ஆணைக்குழுவின் மேலதிக செயலாளர் இந்த அறிவுறுத்தலை யாழ். பிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கத்துக்கு அனுப்பியுள்ளார்.

தொண்டர் ஆசிரியர்களின் சேவைக்காலம், தராதரம் போன்ற விவரங்களை பெற்றோர் மற்றும் பழைய மாணவர்கள் முன்னிலையில் பகிரங்கமாக விசாரணை செய்ய வேண்டும் என்று அந்த அறிவுறுத்தலில் விவரிக்கப்பட்டுள்ளது [ஒ-3]


## யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை [வ. து]

## பதவி வெற்றிடம்

1. பதவி - எழுதுனர்
2. சம்பளத்திட்டம்:

   1030 — 1355
   20 X 10 — 25 X 5

   [கூட்டுறவுப் பணியாளருக்கு வழங்கப்படும் சகல படிகளும் வழங்கப்படும்]
3. கல்வித் தகைமை:-

   [அ] கூட்டுறவுப் பணியாளர் 14 ஆவது சம்பளத் திட்டத்தில் எழுதுனர் பதவியில் இரண்டு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

   அல்லது

   க.பொ.த.[சாதாரண] தரத்தில் இரு அமர்வுகளிற்கு மேற்படாமல் 6 பாடங்களில் சித்தியடைந்து அதில் தூயகணிதம்/வர்த்தக எண்கணிதம்/ எண்கணிதம் இவற்றில் ஒன்றினையும், தமிழ் மொழி/சிங்கள மொழி ஒன்றினையும் உள்ளடக்கி 5 திறமைச் சித்திகளுக்கு குறையாதவர்.
4. வயதெல்லை:-

   18 — 40 வருடம்
5. விண்ணப்ப முடிவு திகதி: 10—04—1992
6. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-

   செயலாளர், யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை, இல. 15, சிறாம்பியடி லேன், யாழ்ப்பாணம்.
7. அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்.

   [ஆ] கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர பயிற்சியில் சித்தியெய்தவர்களுக்கும் கணக்கியல், தட்டச்சில் சித்தியடைந்தவர்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்

   [இ] விண்ணப்பப்படிவங்களை ரூபா 5/- செலுத்தி வேலை நாட்களில் காரியாலயத்தில் பெற்று விண்ணப்பிக்கவும்.

31 - 03 - 1992 - செயலாளர்.

[சி/1808]



## ஆங்கில மொழிப் போதனை

பாடசாலை விலகிய

A/L வெளிவாரி

G. A. Q. / Commerce,

தொழில் நுட்பக் கல்வி பெறும் மாணவர்களுக்குரியது.

ஒருங்கிணைந்த விரிவான கற்கை நெறி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

★ 6 மாதக் கற்கைநெறி ★

திங்கள், புதன் பிற்பகல் 3 — 5 வரை

புதிய பிரிவு ஆரம்பம்:

04-04-1992 சனி 3 மணி

நேர சூசி: சனி, ஞாயிறு } 3 — 5

ஆசிரியர்: த. ந. பஞ்சாட்சரம்

NEW SCIENCE HALL

KANNATHIDDY ROAD, JAFFNA.

[சி-1692]


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 13 — 03 — 1966

உதிர்வு: 08 — 04 — 1986

## பொன்னையா ஜெயந்தி (ராசாத்தி)

பாசமுள்ள மகளே!
பண்பின் பிறப்பிடமே!
ஆறாண்டுகள் சென்றதம்மா
என்றும் உன் நினைவு எங்கள்
நெஞ்சை விட்டகலாது.

ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:

ஐயா, அம்மா, சகோதரர்கள்.

சுதுமலை,
மானிப்பாய்.

[20322]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 22 — 06 — 1908

மறைவு: 03 — 03 — 1992

## திருமதி நல்லதம்பி சின்னம்மா

எங்கள் இதயங்களில் அணையாத தீபமாய் சுடர் விட்டு பிரகாசித்த எமது அன்னையின் ஆத்ம சாந்திக்காக இன்று (2-4-1992) அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள் ஆகியோரை அழைக்கிறோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

மாவிசந்தி,
அல்வாய்.

[சி-1757]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

1-4-92 காலை 8-15 அளவில் காங்கேசன்துறை வீதியில் உள்ள நாச்சிமார் கோவிலில் சைக்கிளில் வைத்தபேர்ஸ் தவறிவிட்டது. ரூபா 100 பணமும், யாழ். பல்கலைக் கழக அடையாள அட்டையும், திறப்பும் அடங்கும், தயவு செய்து மூன்று திறப்புடனான கோர்வையை காங்கேசன் துறை வீதி, நாச்சிமார் கோவில் வண்ணார்பண்ணை என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [20319]

## திருமண சேவை

திருமணத்தை எதிர்நோக்கியுள்ளோரது ஜாதகங்களையும், தகவல்களையும் 'மணப் பொருத்தத்துக்கான ஜாதகம்- தகவல்கள் பரிவர்த்தனை நிலையத்தில்' பதிந்து பொருத்தமான துணையைத் தேர்ந்து எடுக்கலாம், பொருத்தமான ஜாதகங்களுக்கு தகவல்கள் உடனுக்குடன் வழங்கப்படும். விவரங்கள் நேரில். தொடர்பு 3, யாழ். வீதி, யாழ்ப்பாணம். [4601]

## மாணவர் அகராதி

ஆங்கிலம் படிக்கிறீர்களா? உங்களுக்கு கிடைக்கக் கூடிய மிகச் சிறந்த ஆங்கில, தமிழ் அகராதி 'வரதர் மாணவர் அகராதி' ரூபா 95/- எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம், [சி-1699]

## புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [4578]

## மாதிரி வினாத்தாள்கள்

A/L 91 பரீட்சைக்குத் தயாராகும் விஞ்ஞான மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் மலிவு விலையில் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes, 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (4577)

## A/L வினாத்தாள்

விலங்கியல், தாவரவியல், பௌதிகவியல், இரசாயனவியல், தூய — பிரயோக கணிதம் முன்மாதிரி வினாத்தாள்கள் விற்பனையாகின்றன. Personal New Science Centre, எழிலகம் முன் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி- 1811]

## விக்னா கல்வி நிறுவனம்

**G. A. Q.**

யாழ். பல்கலைக்கழக வெளிவாரி

பொருளியல்
திரு. க. கலாகரன்
பிரித்தானிய வரலாறு
3 மணி

பொருளியல் கொள்கைகள் கோட்பாடுகள்
4-30 மணி

ஆரம்பம்:
03 — 04 — 1992 [வெள்ளி]

[சி-1806]

---

# தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

## யாழ். மாவட்டம்

## விசேட பொதுக்கூட்டம்

இடம்: புதிய விஞ்ஞானக் கல்விக் கழகம் (எழிலகம் முன்பாக)
காலம்: 3-4-1992 வெள்ளி மாலை 4·00 மணி

விடுமுறை கால வகுப்புக்கள் பற்றியும், ஏனைய சில முக்கிய விடயங்கள் பற்றியும் கலந்துரையாடப் படவுள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து தனியார் கல்வி நிறுவன இயக்குனர்களும் தவறாது சமுகம் தரவும். வி. பு. ம. மு. பிரமுகர்களும் கலந்து கொள்வார்கள்.

[20322] — பொதுச் செயலாளர்.

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## ஆழ்வார் கந்தப்பு

மலர்வு: 04 - 06 - 1901
உதிர்வு: 03 - 03 - 1992

எங்கள் குடும்பத்தின் தலைவரே! உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்!

க. இரத்தினம் - குடும்பத்தினர்.

துன்னாலை தெற்கு,
கலிகை,
கரவெட்டி.

[20261]

---

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் உயிர்ப்பு: 30 — 04 — 1968

அநியாய அழிப்பு: 05 — 04 — 1988

செல்வன்

## கிருஷ்ணபிள்ளை ஜெயபாலன்

[யா / கொக்குவில் இந்துக் கல்லூரி, உயர்தர மாணவன்]

திதி: 02 — 04 — 1992

நியாயங்களுக்காகப் போராடி
நியாயங்கள் மறுக்கப்பட்ட நிலையில்
நியாயமேயற்று
மரணித்த
மரணித்துக் கொண்டிருக்கின்ற
அனைத்து ஜீவன்களும்
எம் நினைவலையில்
ஓர் தினம்.

— மனிதம் —

- குடும்பத்தினர்.

''சசிபவனம்'',
சுதுமலை தெற்கு.

[20318]

---

# காணவில்லை



## நீ.இ. சங்கரப்பிள்ளை தம்பு

வேலணை வடக்கு வாசியான, நீ. இ. சங்கரப்பிள்ளை தம்பு அவர்களை 26- 03- 1992 வியாழக் கிழமை முதல் காணவில்லை. இவரைக் காண்பவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு தயவு செய்து தகவல் தரவும்.

அலங்கார் நகை மாளிகை,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[20312]

---

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை **பாலச்சந்திரன்**

(ஞா. லக்ஷ்மீகரன்)

தமிழீழ மண்ணில்: 14 — 12 — 1967
மண்ணின் விடிவிற்காக: 02 — 04 — 1987

தாய் தந்தை வழி அனுப்ப பாலச்சந்திரா!
நீ தாயகம் மீட்பேன் என்றாய் பாலச்சந்திரா!
உடன் பிறப்புக்கள் வழி அனுப்ப பாலசந்திரா!
கூடவே கடுகதி நீயும் சென்றாய் பாலச்சந்திரா!
தன் மானம் கொண்டவன் நீயும் பாலச்சந்திரா!
தாயின் மண்மானம் காப்பேன்
என்றாய் பாலச்சந்திரா!
கண்களில் தேங்கும் பாசத் தீயை
நீயும் பாலச்சந்திரா!
கட வழி போக ஓட விட்டாயே
நீயும் பாலச்சந்திரா!
விழுதுகள் எம் குடும்பம் என்பாயே
நீயும் பாலச்சந்திரா!
இது வீரவேங்கைகள் நாடும் கோட்டை
என்பாயே பாலச்சந்திரா!
மரணமோ ஒரு நாள் நிச்சயம்
என்றாயே நீயும் பாலச்சந்திரா!
ஆனால் சாவிலும் மண்மீட்பில் சாவேன்
என்றாயே நீயும் பாலச்சந்திரா!
களம் பல கண்டு சிங்களவன் கதைதனை
முடித்தவன் நீ பாலச்சந்திரா!
காலன் வரும் நேரம் தெரியாதவன்
நீயும் பாலச்சந்திரா!
காவல் அரண் முகாம் தகர்க்கச்
சென்றாயே பாலச்சந்திரா!
ஆனால் காலனும் உனைக் கொண்டு
சென்றானோ பாலச்சந்திரா!
மண்ணுக்கு உன் உயிர் நீத்தாயே
நீயும் பாலச்சந்திரா!
மாவீரன் மரணத்திலும் உன் புகழ்கண்டோம்
நாம் பாலச்சந்திரா!
எம் கண்களில் நீர் பெருகிக் கொண்டே
வரும் பாலச்சந்திரா!
ஆனாலும் கானல் நீர் அல்ல
உன் புகழ் பாலச்சந்திரா!
தமிழிலும் காவியக் கதாநாயகனில்
நீயும் ஒருவன் பாலச்சந்திரா!
எம் நெஞ்சில் காயத்தால் அழிக்க முடியாததும்
உன் கதை பாலச்சந்திரா!

— வாழ்க வளர்க தமிழீழம் —

இக் களத்தினில் மடிந்த ஏனைய மாவீரர்களுக்கும்
எம் இதய அஞ்சலி

ஐயா, அம்மா, சகோதரர், மாமி, மாமா, அப்பு, அன்ரிமார், அக்கா, அத்தான், தங்கை, மைத்துனர், சகோதரிகள்.

செ. ஞானசேகரம்,
வெற்றிலைக் கேணி,
நாகர் கோவில்.

[20286]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தற்கொலைக்கு தயாராவதற்கா?

கிழக்கு மற்றும் மேற்கு ஐரோப்பிய நாடுகள் தம்மிடம் உள்ள ஆயுதங்களை இலங்கைக்கு விற்பனை செய்வதற்குப் போட்டி போட்டுக் கொண்டு சந்தை வாய்ப்புத் தேடுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து ஐரோப்பிய நாடுகள் உள்நாட்டுச் சண்டை மற்றும் அயல் நாட்டு மோதலில் அக்கறை கொண்டுள்ள மூன்றாம் உலக நாடுகளில் தமது ஆயுதங்களுக்கு சந்தை வாய்ப்பை ஏற்படுத்த முனைவது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றே.

இலங்கையைப் பொறுத்த மட்டில் இங்கு நடக்கும் யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்சினையை அரசியல் தீர்வு ஒன்றின் மூலம் முடிவுக்குக் கொண்டு வரும் விருப்பம் அரசுக்கு இல்லை. அதனால் தனது படை பலத்தை மேலும் வலுப்படுத்த அது நினைப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. மலிவு விலையில் ஆயுதங்களை வாங்கிக் குவித்துத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை நிரந்தரமாக நசுக்கி அவர்களை ஆக்கிரமித்து வைத்திருக்கலாம் எனவும் அரசு கணக்குப் போடுவது சாத்தியமே.

ஆயுத பலத்தையும் ஆட்பலத்தையும் அதிகரிப்பதால் ஓர் இலட்சியத்துக்காக— தமது சுதந்திரத்துக்காக— போராடும் மக்களை நசுக்கி விடமுடியாது. அண்மைக் காலமாகத் துதப்புகளுக்கு ஏற்பட்டு வரும் இழப்பையும், அவர்கள் படையைவிட்டு விலகிச் செல்லுவதையும் ஒப்புக்கொள்ளும் அரசு, அதன் பின்னரும் ஆயுத பலத்தால் தமிழர்களை நசுக்கிவிடலாம் என்று நினைத்தால் அதைவிட வேறு முட்டாள்தனம் இருக்க முடியாது!

இராணுவத்தில் சேர்பவர்கள் இலட்சியம் ஒன்றை அடைவதற்காகப் போராட முன் வருபவர்கள் அல்லர். தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்தத் தேவையான ஜீவனோபாயத்தைத் தேடியே அதில் சேருகிறார்கள். தமது உயிருக்கு ஆபத்து என்று தெரிந்ததும் படையை விட்டு விலகவே செய்வர். ஒவ்வொரு மனிதனுக்கும், இந்த உலக வாழ்வில், உயர்ந்த உடைமை உயிர் தான்.

ஆனால் அந்த அரிய உயிரையும் இலட்சியத் தீயில் ஆகுதியாக்கத் தயாராகி, தியாகம் செய்யும் மனப்பக்குவத்துடன் போராடும் போராளி வேறு.

எனவே எந்த நவீன ஆயுதங்களைக் கொள்வனவு செய்தும், இராணுவத்தைப் பலப்படுத்தியும் தியாகிகளான போராளிகளுடன் சம்பளத்துக்காக ஆயுதம் ஏந்தும் சிப்பாய்களினால் போரிட்டு இறுதி வெற்றி காணமுடியாது.

இதனை உணராமல், ஆயுதங்கள் தேடி வருகின்றனவே, மலிவாகக் கிடைக்கின்றனவே என்பதற்காக அவற்றை வாங்கிக் குவித்து நாட்டின் பொருளாதாரத்தை நலியச் செய்வதால் ஏற்படக் கூடிய விளைவுகளையும் அரசு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

பாதுகாப்புச் செலவினத்தை அதிகரித்துக் கொண்டே போனால், நாடும் மக்களும் அதள பாதாளத்தில் விழுந்து மடிந்தொழியும் நிலை நிச்சயம் உருவாகும்.

யுத்தம் என்பது அரசுக்கு, தென்னிலங்கை மக்களுக்கு பெரும் தற்கொலையாக முடியும் என்பதை இனியும் கிரகிக்கத் தவறினால் அதற்கு அடுத்தவர்கள் பொறுப்பல்லவே!

# அன்றாட அலுவல்களில் நாம் எந்தளவுக்கு தமிழை பாவிக்கிறோம்?

## பெயர்ப் பலகை மாறினால் போதாது

ஈழத் தமிழ் மண்ணில், தனிச் சிங்களச் சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படுவதற்கு முன்னர் ஆங்கிலம் பிரதான மொழியாக இருக்கத் தமிழும் இணைந்து செயற்பட்டது. தமிழ் மண்ணுக்கு அப்பாலும் தமிழும் ஆங்கிலமும் கணிசமான அந்தஸ்தைப் பெற்று வந்தன.

பண்டார நாயக்காவின் தனிச் சிங்களச் சட்டத்தால், வட-கீழ் இலங்கை என்னும் தனித்தமிழ் மண்ணில், தனிச் சிங்களம் பலாத்காரமாக அரசு ஓச்சியது. இதனை அடுத்து நியாயமான தமிழ் பிரயோகம் என்ற கபடச் சட்டமும் அமுலாகியது. இக்கால கட்டத்திலும், தனிச் சிங்களப் பிடி தளரவில்லை, அக்காலத்திலும் சிங்களமும் ஆங்கிலமும் இணைந்தே அரசு ஓச்சின.

இதனை அடுத்து, பெயரளவில், தமிழ் மொழிக்கும், அரச மொழியோடு சம அந்தஸ்து (சர்வ சம அந்தஸ்து அற்ற) வழங்குவதாகக் கூறி ஒரு சட்டத்தை அரசு நிறைவேற்றியுள்ளது. அதன் மூலம் தமிழ் மொழிக்கு உரிய இடம் தந்து விட்டதாக அரசு உரக்கக் குரல் கொடுத்து வருகின்றது.

இவையெல்லாம் புதியவை அல்ல. மொழி அந்தஸ்து சம்பந்தமாக இடம் பெற்ற சட்ட ஏற்பாடுகளின் வரலாறு. தமிழை முழுமையாக இல்லாவிடினும் ஓரளவு கணிசமான அளவுக்குப் பாவிக்கும் உரிமையைப் பெற்ற நாம், அதனை எப்படிப் பயன் படுத்துகிறோம்?

கிடைத்த உரிமையை தமிழ் மண்ணிலாவது நன்கு பயன் படுத்துகின்றோமா? என புள்ளி விவரங்களோடு ஆராய முற்படின் பெரும் ஏமாற்றமே எம்மைச் சூழ்கின்றது.

தமிழ் மண்ணில் இயங்கும் அலுவலகங்கள் இன்னமும் ஆங்கிலத்தைக் கைவிட விரும்பவில்லை. படிவங்கள், பத்திரங்கள், கோவைகள், அன்றாட அலுவலக நடை

**- அரச ஊழியன் -**

முறைகள் இன்னமும் முழுமையாக 'தனித் தமிழ்' என்ற நீரோட்டத்தில் கலக்கவில்லை.

**இன்னமும் சிங்களத்தில்**

கொழும்பில்இருந்து தமிழ் மண்ணை வந்தடையும், அரச ஆவணங்கள், இன்னமும் முழுமையாகச் சிங்களத்திலேயே இருப்பது வேதனையைத் தருகின்றது. அந்தைய ஆவணங்களிலும், சுற்றறிக்கைகளிலும் ஆங்கில மொழி பெயர்ப்புக்கூட இல்லை. கொழும்பு அரசு தமிழைப் பற்றிச் சிறிதேனும் எண்ணிப்பார்ப்பதில்லை என்பது புலனாகிறது.

தமிழ் மண்ணில் வாழும் மக்களைப் பொறுத்த மட்டில்,' அவர்கள் எழுதும் கடித உறை மேல் விலாசங்கள், நிரப்பும்படிவங்கள், வங்கிக்கணக்குகள், இறைவரி, மற்றும் அரச சார்பிலான விண்ணப்பங்கள், இவற்றை மேலோட்டமாக ஆராயின் இன்னமும் 60 வீதம், தமிழ் புறக்கணிக்கப்படுவது புலனாகிறது.

எல்லாம் தமிழ், எதுவும் தமிழ் என்ற நிலைப்பாட்டை நாமே முன் நின்று உதாசீனம் செய்து கொண்டு நமக்கு வேண்டுவது தமிழ் உரிமை, தமிழ் மொழிக்கு அந்தஸ்து என்று பேசி வருவது எம்மை நாமே ஏமாற்றுவதாகாதா? தமிழ்ப் பாவனையை முழுமைப்படுத்த அதற்கான ஒரு மாதத்தை ஒதுக்கி பிரபல்யப் படுத்த முயற்சிக்கக் கூடாதா?

இப்போது நிலவும் போர்க் காலத்தில் ஒருவகையான தமிழ் எழுச்சி தென்படுவது உண்மையே. வர்த்தக நிலையங்கள், தெருப் பெயர்கள், நிறுவனங்களின் பெயர்கள் போன்றவை தனித் தமிழில் இடம் பெறுவது உற்சாகம் ஊட்டுகின்றது.

ஆனால் வெளியிலே பெயர் பலகை மட்டும் மாறி விட உள்ளே உள்ளவர்கள் தம் மனப் போக்கை மாற்றினார்களா? என்பதனைச் சிந்திக்க வேண்டியுள்ளது — வர்த்தக நிறுவனங்கள் தம் வங்கிக் கணக்குகளை, கடிதத் தொடர்புகளை, படிவங்களை முழுமையாக தமிழுக்கு மாற்றி விட்டனவா? அதுவும் சந்தேகமே!

ஓர் இனம் வாழ, மொழி வாழ வேண்டும். மொழி வாழ்வதற்கு அதைப் பேசும் மக்கள் அதற்கான முன் உரிமையைத் தந்து நிற்க வேண்டும்.

எமது தாய்த் தமிழ் மொழியை எவ்வாறு ஏற்றிப் போற்றலாம், எவ்வாறு அதனை அரியணை ஏற்றலாம், மாற்று மொழி மோகத்தை எப்படித் திட்டமிட்டுக் களையலாம்? இவை போன்ற விடயங்களில், பல்கலைக்கழகம் முதலாக பாமர மக்கள் வரை, ஆழமாகச் சிந்தித்து, செயல் வடிவம் கொடுத்து, நம் தமிழை நாம் போற்றி, நடைமுறைப்படுத்தும் திட்டங்களை அமுல் செய்யும் நேரம், காலம் நெருங்கி விட்டன.

தமிழ் மொழி உபயோகம் பற்றிய புள்ளி விவரங்களைத் திரட்டினால், தமிழர்களின் தமிழ் ஆர்வம் குறித்து திடுக்கிடவும், துணுக்குறவும் நேரிடும்! ★

**கூட்டுப்படைத் தலைமையகக் குண்டு வெடிப்பு:**

## சந்தேக நபர்களுக்கு விளக்க மறியல் நீடிப்பு

கூட்டுப்படைகள் தலைமை அலுவலகக் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட ஏழு சந்தேக நபர்களையும் எதிர்வரும் ஜூன் மாதம் 26 திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி கொழும்பு பிரதம நீதிவான் சரத் அம்பேபிற்றிய உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் விடுதலைப் புலிகளுக்கு நிதி உதவி அளித்து வந்துளரா என்ற அம்சம் பற்றி விசாரணை நடத்த வேண்டியிருப்பதாக பொலீஸ் இன்ஸ்பெக்டர் சேனாடி அல்விஸ் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

விசாரணையின் போது பொலீஸாரால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகள் ஆகியவற்றை அரசாங்க பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

**இந்தியாவில் பயின்ற**

## சங்கீத ஆசிரியர்களுக்கு பட்டதாரிச் சம்பளம்

யாழ்ப்பாணம், ஏப். 2

இந்தியாவில் உள்ள எந்தப் பல்கலைக்கழகத்திலாவது சங்கீதத்துறையில் நான்கு ஆண்டுப் பயிற்சி பெற்று படிப்பைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு பட்டதாரிகள் சம்பளத் திட்டத்தின் அடிப்படையில் வேதனம் வழங்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

வடபிராந்திய கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் வடக்கு — கிழக்கு மாகாண கல்விச் செயலாளருடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து இந்த அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இதுவரை பட்டதாரிச் சம்பளம் பெறாமல் இருக்கும் ஆசிரியர்கள் தத்தமது கோட்டக் கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [இ-5]

## சோயா உற்பத்தி குறித்து கிளிநொச்சியில் விளக்கம்

பரந்தன், ஏப். 2

கிளிநொச்சியில் அண்மையில் ஆய்வு நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட ஒரு கலந்துரையாடலில் சோயா உற்பத்தி குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

45 வீத புரதச்சத்தைக் கொண்ட சோயாவின் முக்கியத்துவம் குறித்து அங்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டன. கலந்துரையாடலின் போது சோயா அவரையில் இருந்து தயாரிக்கப்பட்ட சிற்றுண்டிகளும் பரிமாறப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் போஷாக்குக் குறைவால் ஏற்படும் நோய்களினால் பாதிக்கப்பட்ட பலர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுவது, அண்மைக் காலங்களில் அதிகரித்து வருவது குறித்தும் கலந்துரையாடலில் சுட்டிக் காட்டப்பட்டது.

விவசாயப் பயிற்சியாளர்களுக்கும், கால்நடை பயிற்சியாளர்களுக்குமான இந்தக் கலந்துரையாடலில் ஆய்வு நிறுவன பிரதிநிதிகளும், விடுதலைப் புலிகள் இயக்க அரசியல் பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர். [ஆ-122]

**மஹரகம ஆஸ்பத்திரி நிலைமை:**

## 50 ஆயிரம் புற்று நோயாளர் எதிர்நோக்கும் பேராபத்து!

கொழும்பு, ஏப். 2

மஹரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியில் உள்ள கதிரியக்க இயந்திரங்கள் செயலிழந்துள்ளமையால், நாட்டில் உள்ள சுமார் 50 ஆயிரம் புற்று நோயாளர்கள் மரணத்தை எதிர் நோக்கும் ஆபத்துக்குள்ளாகி இருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த இயந்திரங்கள் சரியான முறையில் பராமரிக்கப்படாமையே அவை செயலிழந்து போனமைக்குக் காரணம் என்று டாக்டர்கள் கூறுகின்றனர்.

இயந்திரங்களைக் கையாளுவதற்கு நியமிக்கப்பட்டிருப்பவர்களில் சிலருக்கு அவற்றைச் செயற்படுத்தும் விதம் தெரியாதவர்களாகவும் உள்ளனர் என்று ஒரு டாக்டர் கூறினார்.

தினசரி குறைந்தது 300 நோயாளர்கள் கோபால்ற் — கதிர் சிகிச்சைக்காக மஹரகம புற்றுநோய் ஆஸ்பத்திரிக்குச் செல்கின்றார்கள்.

அடுத்த மூன்று மாதங்களில் மூன்று புதிய கோபால்ற் — கதிரியக்க இயந்திரங்களைக் கொள்வனவு செய்ய சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது. [ஓ-எ]

## ஹெலித் தாக்கு!

தென்மராட்சி, ஏப். 2

கடந்த திங்கள் நள்ளிரவு 11.45 மணிக்கு மீசாலை கண்டி வீதியில் சென்று கொண்டிருந்த வாகனத்தின் மீது ஹெலியிலிருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. பெரும் சேதம் ஏதும் ஏற்படவில்லை. [உ-117]

## மிக்கெய்ல் கோர்பச்சேவ் திரைப்பட நடிகராகிறார்!

பொன், ஏப் 2

முன்னாள் சோவியத் ஜனாதிபதி மிக்கெய்ல் கோர்பச்சேவ் திரைப்பட நடிகராகிறார்.

ஜேர்மன் சினிமாத் தயாரிப்பாளர் விம்வெண்டர்ஸ் "ஆசையின் இறகுகள்" என்ற படத்தைத் தயாரித்து வருகின்றார்.

வாழும் மனிதர்களிடையே நடமாடும் தேவதைகளைச் சித்திரிப்பதாக இப்படம் அமைந்துள்ளது.

இப்படத்தில் கோர்பச்சேவ் நடிக்கும் பகுதிகள் ஏற்கனவே படமாக்கப்பட்டு விட்டன என்று தயாரிப்பாளர் வெண்டர்ஸ் தெரிவித்தார்.

கடந்த மாத முற்பகுதியில் பவேரியாவிற்கு கோர்பச்சேவ் விஜயம் செய்தார் அப்போது அவர் கலந்து கொள்ளும் காட்சிகள் படமாக்கப்பட்டன. தேவதை ஒன்றுடன் கோர்பச்சேவ் உரையாடுவதாக அக்காட்சி அமைக்கப்பட்டு இருந்தது.

அக்காட்சியில் தேவதையிடம் கோர்பச்சேவ் பின்வரும் செய்தியை விடுத்தார்:-

"வன்செயல்கள் மீது உலகம் ஒன்றைக் கட்டி எழுப்ப உங்களால் முடியாது அரசியல்வாதிகள், நடிகர்கள், கலைஞர்கள், தொழிலாளர்கள், ஆண்கள், பெண்கள், மதங்களின் பிரதிநிதிகள் அனைவரும் இதனை ஏற்கும்போது தான், எல்லாப் பிரச்சினைகளுக்கும் நாம் தீர்வு காண முடியும்" — இதுவே அச்செய்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோலங்கி ராஜினாமா விவகாரம்:

# சுவீடன் ஒப்புக் கொள்கிறது

ஜெனிவா, ஏப். 2

போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் தொடர்பான விசாரணையைத் தாமதப்படுத்துமாறு சுவீடிஷ் அரசிடம் கோரிக்கை விடப்பட்டதை அந்த நாட்டின் நீதி அமைச்சு உறுதிப்படுத்தி உள்ளது.

முன்னாள் வெளியுறவு அமைச்சர் மாதவ்சிங் சோலங்கி கடந்த பெப்ரவரி மாதத்தில் சுவீடிஷ் வெளியுறவு அமைச்சரிடம் ஒப்படைத்த கடிதத்தில் இக்கோரிக்கை விடப்பட்டிருந்தது என சுவிடிஷ் நீதி அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

திரு சோலங்கியின் ராஜினாமா பற்றி கருத்து வெளியிடுகையிலேயே சுவீடிஷ் அதிகாரி இத்தகவலை வெளியிட்டார். (ஒ-த)

## லோகசபையில் காரசாரம்

புதுடில்லி, ஏப். 22

போபர்ஸ் பேர ஊழல் விவகாரம் லோகசபையில் நேற்றும் காரசாரமான விவாதத்தை ஏற்படுத்தியது

முன்னாள் வெளியுறவு அமைச்சர் சோலங்கி போபர்ஸ் விசாரணையைத் தாமதப் படுத்துமாறு கோரி, சுவீடிஷ் வெளியுறவு அமச்சரிடம் ஒப்படைத்த கடிதத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் என்று எதிர்க்கட்சி எம்பிக்கள் வற்புறுத்திய போதே, சபையில் குழப்பம் நிலவியது.

போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் விசாரணையைத் தாமதப்படுத்துமாறு இந்திய அரசு கோரவில்லை என்று பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் சபையில் கூறினார் [ஒ-எ]

### யாழ்ப்பாண..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கள் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர். இந்தப் பதவிகளுக்கான விண்ணப்பங்களை பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் அமைச்சின் செயலாளர் ஜனாப் எம். என் ஜுனைத் கோரியுள்ளார்.

இப்பதவிகளுக்கு நியமிக்கப்படுவோருக்கு ஆரம்பத்தில் மாதச் சம்பளம் ஆறாயிரம் ரூபாவாகவும் இரண்டாயிரம் ரூபா வாசஸ்தலப் படியாகவும் வழங்கப்படும்.

மினிக் கச்சேரிகளில் நியமிக்கப்படும் அரச அதிபர்கள் இப்போது மாகாண சபைகள், மாவட்ட அரசாங்க அதிபர்கள், துணை அமைச்சுகள் செய்யும் பணிகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரங்களைக் கொண்டிருப்பர்.

இப்பதவிகளுக்கான விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதி நாள் இம்மாதம் ஏழாம் திகதியாகும். [அ-3]

### மத்திய..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பொலீஸில் அத்துமீறல் புகார் ஒன்றைப் பதிவு செய்துள்ளார்.

நுவரெலியாவில் உள்ள தமது தனிப்பட்ட விடுமுறை பங்களாவினுள் இரண்டு ஜீப்களில் வந்த பாதுகாப்புப் படையினருடன் பலாத்காரமாக டாக்டர் கருணாதிலகா நுழைந்தார் என்று அவரது முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையில் குறிப்பிட்ட பங்களா மெர்க்கண்டைல் கிறெடிற் லிமிட்டெட்டுக்கு உரியது அல்ல என்றும் ஜெயவர்த்தனா குடும்பத்துக்குச் சொந்தமான அலைட் இன்வெஸ்ட்மென்ற்ஸ் ஸ்தாபனத்துக்குச் சொந்தமானது என்றும் திரு. என். யு. ஜெயவர்த்தனா தெரிவித்தார்

மெர்க்கண்டைல் கிறெடிற் லிமிட்டெட் நிறுவனத்தை மத்திய வங்கி பொறுப்பேற்றுத் தற்போது நிர்வகித்து வருகின்றது என்பது தெரிந்ததே. (ஒ-எ-10)

### இரு பொலிஸ்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

பதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர். படையினரின் பலத்தைச் சோதிக்கும் பெரும் பேரிடிகளில் இத்தாக்குதல்கள் ஒரு பகுதி என்றும் அவை மேலும் தெரிவித்தன.

கிழக்கில் பொலீஸ் நிலையங்கள் மீது புலிகள் இம்முறை நடத்தியது முற்றிலும் புதிய முறை தாக்குதல்கள் என்றும், பெரும் துணிகரமிக்க தீரச் செயல்கள் என்றும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (ஒ-எ-10)

### பணப்புழக்கம்..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

டாகி இருந்தது. கூட்டுப் படைத் தலைமை அலுவலகமும் அதற்கு அனுமதி வழங்கியிருந்தது.

பலமாதங்களாகக் கப்பல் மூலம் பணம் கொண்டு வரப்பட்டே சுற்றோட்டத்துக்கு விடப்பட்டது.

நிலைமை சீரடைந்ததன் காரணமாக கடந்த அக்டோபரில் பணத்தைக் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் கொண்டு வருவது தவிர்க்கப்பட்டது. ஆனால் கடந்த மாதத்தில் குடாநாட்டில் பணப்புழக்க நிலை மீண்டும் பாதிப்புற்றது.

அதனைத் தொடர்ந்து முந்திய ஏற்பாட்டின் பிரகாரம் கப்பல் மூலம் பணம் அனுப்புமாறு மார்ச் மாத முற்பகுதியிலேயே கேட்டிருந்தோம்.

ஒரு மாதம் கடந்தும் இன்னும் அங்கிருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. பணமும் வரவில்லை. தற்சமயம் மோசமான நிலை உருவாகியுள்ளது

கூட்டுப்படைத் தலைமை அலுவலகத்திடம் அனுமதி பெறுவதில் தாமதம் ஏற்பட்டிருக்கலாம். சேதமடைந்த பண நோட்டுகளை மத்திய வங்கி பெருமளவில் அழித்திருந்தது. அதற்கு ஈடான புதிய நோட்டுகள் அச்சிடப்பட்டு வந்து சேராமையினாலும் தாமதம் ஏற்படக்கூடும் என்று தெரிவித்தார். [அ-3]

### லிபியா..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

லிபிய இரகசியப் பொலீஸாரை விசாரணைக்காக சம்பந்தப்பட்ட மேற்கு நாடுகளிடம் இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பதாக லிபியா ஒப்படைக்க வேண்டும் என்றும்—

இதற்குத் தவறும் பட்சத்தில் இத்தடைகள் இம்மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் என்றும் ஐ. நா. பாதுகாப்புச் சபை மேலும் தீர்மானித்துள்ளது.

தடைகளை விதிக்கும் பிரேரணை மீதான வாக்களிப்பில் சீனா, கேப்வேடே, இந்தியா, மொரொக்கோ, ஸிம்பாப்வே ஆகியன கலந்து கொள்ளவில்லை.

அமெரிக்கா, பிரிட்டன், மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் கூட்டாக அப்பிரேரணையைக் கொண்டுவந்திருந்தன

இதேவேளை—ஐ நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை லிபியா கண்டித்துள்ளது.

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் முடிவு சர்வதேசச் சட்ட நிதிகளுக்கு முரணானது என்றும் அநீதியானது என்றும் லிபியா வர்ணித்துள்ளது. [எ-த-10]

## கட்டுத் துப்பாக்கி வெடித்து காயம்

வேட்டைக்காக கட்டுத் துப்பாக்கி தயார் செய்து கொண்டிருந்தவர், அது திடீரென வெடித்ததில், கையில் படுகாயமடைந்தார்.

பளை, தர்மக் கேணியில் நேற்று முன் தினம் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த நல்லையா பாலசிங்கம் (வயது 42) என்பவரே காயமடைந்தவர் ஆவார்.

இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [ஒ-15]

## சிறுமி படுகாயம்

தென்மராட்சி, ஏப். 2

தண்ணீர் அள்ளிய போது வாளிக்கயிறு அறுந்ததால், கிணற்றில் விழுந்த சிறுமி தலையில் படுகாயமடைந்தார்.

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டப் பகுதியில் கடந்த திங்களன்று நடந்த இந்தச் சம்பவத்தில் நவரத்தினம் ஆரணி [வயது 7] என்ற சிறுமியே படுகாயமடைந்தார்.

இவர் சுய நினைவற்ற நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார். [ஒ-117-15]

## புதிய சுகாதார பணிப்பாளர்

வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக டாக்டர் பி. இரத்தினசபாபதி நியமிக்கப்பட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் சுகாதார அமைச்சுப் பணிப்பாளராகக் கடமையாற்றி வந்த இவர், நேற்று முதல் பிராந்திய பணிப்பாளராக மீண்டும் நியமனம் பெற்றுள்ளார்.

டாக்டர் இரத்தினசபாபதி ஏற்கனவே வட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளராக நீண்ட காலம் பணிபுரிந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

டாக்டர் என். கனகசபை ஓய்வு பெற்றதை அடுத்தே புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. [ஒ-18]

## சுவாமி சாந்தானந்தா பிறந்த தினம்

சுவாமி சாந்தானந்தாவின் பிறந்ததின விழாவும் இராமகிருஷ்ணாலய நுண்கலைக் கல்லூரியின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவும் இம்மாதம் 7 ஆம் திகதி பிற்பகல் 3-00 மணிக்கு திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள இராமகிருஷ்ணாலயத்தில் இடம்பெறும்.

பருத்தித்துறை இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா வைபவத்துக்குத் தலைமை வகிப்பார்.

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். [இ]

## ரஷ்யாவுக்கு 2,400 கோடி டொலர் உதவி

பிரஸ்ஸல்ஸ், ஏப். 2

ரஷ்யாவுக்கு 2,400 கோடி டொலர் கடனுதவி அளிப்பது என்று ஏழு முன்னணிக் கைத்தொழில் நாடுகளும் முடிவு செய்துள்ளன.

ஜி - 7 என்று அழைக்கப்படும் பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான், ஜேர்மன், கனடா, இத்தாலி ஆகியனவே அந்த ஏழு நாடுகளும் ஆகும். [இ-எ]

### பரீட்சை..

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

எனினும் விடுதலைப்புலிகள் தாக்கினால் இராணுவம் திருப்பித் தாக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அச்செய்தி மேலும் கூறுகிறது. [இ-எ]

## வீடு இடிந்து மூவர் காயம்

வீடு ஒன்று இடிந்து விழுந்ததால் அதற்குள் படுத்திருந்த மூவர் படுகாயம் அடைந்தனர்.

யாழ். நீராவியடி பிரவுண் வீதியில் நேற்று நள்ளிரவு அளவில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

அல்லைப்பிட்டியில் இருந்து இடம்பெயர்ந்து வந்து இங்கு தங்கி இருந்த சொர்ணசிங்கம் சார்மதிதேவி [வயது 43], அவரது பிள்ளைகளான லிங்கேஸ்வரி [வயது 16], சதீஸ்வரன் [வயது 12] ஆகியோரே காயம் அடைந்தவர்கள் ஆவர்.

இவர்கள் தங்கி இருந்த வீடு, குண்டு வீச்சுக்களினால் சேடாகிப் போய், இருந்த பழைய வீடு என்று தெரிவிக்கப்படுகிறது. [இ-15]

## அகில இலங்கை ரீதியில் கலாசாரப் போட்டி நடக்கும்

### இளைஞர் சேவை மன்றம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஏப். 2

அகில இலங்கை ரீதியிலான கலாசாரப் போட்டி ஒன்றை நடத்த தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றம் முன்வந்துள்ளது.

கர்நாடக சங்கீதம், கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், நடனம், கிராமிய நடனம், பரதநாட்டியம், நடிப்பு, வயலின், மிருதங்கம், வீணை இசை போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

மாவட்ட இளைஞர் சேவை மன்றங்கள் ஊடாக மாவட்ட மட்டத்தில் போட்டிகளை நடத்தி, முதலிடம் பெறுபவர்களுக்கு மட்டும் தேசிய ரீதியிலான போட்டிகள் நடத்தப்படும்.

தேசிய ரீதியிலான போட்டிகள் கொழும்பில் உள்ள மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெற உள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள எல்லா இளைஞர் சேவைகள் மன்றங்களுக்கும் தேவையான விண்ணப்பப்படிவங்களை தலைமைத் தேசிய இளைஞர் மன்றம் அனுப்பி வைத்துள்ளதுடன், போட்டியில் பங்குபற்றுவோரின் விவரங்களை மாவட்ட தேசிய மன்றங்களுக்கு அனுப்பி வைக்குமாறும் கோரியுள்ளது. (ஒ-90)

## மத்திய வங்கியின் முறைகேடுகளை கணக்காளர் நாயகம் அம்பலம்

கொழும்பு, ஏப். 2

மத்திய வங்கியின் நாற்பதாவது ஆண்டு விழாக் கொண்டாட்டத்தை ஒட்டிய விருந்துபசாரத்துக்கு மட்டும் மூன்று கோடி எண்பத்தாறு லட்சம் ரூபா செலவிடப்பட்டிருக்கிறது.

வங்கி ஆளுநரின் உபகாரச் செலவுகளுக்கு 1990 ஆம் ஆண்டில் மூன்று லட்சத்துப் பத்தாயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

கழுத்துப்பட்டிகள் ஒரு லட்சம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இவை பற்றிய கணக்குகளை தாம் பரிசோதனை செய்ய முற்பட்ட போது வங்கியின் செயலாளர் அதற்கு அனுமதிக்கவில்லை என்று கணக்காளர் நாயகம் தெரிவித்திருக்கிறார்.

மத்திய வங்கியின் 1990 ஆம் ஆண்டுக்கான தமது அறிக்கையை கணக்காளர் நாயகம் திரு காமினி ஏப்பா அண்மையில் வெளியிட்டார். அந்த அறிக்கையிலேயே அவர் முன்கண்ட தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

வங்கியின் ஐந்தொகைக் கணக்கு ஒன்றைத் தாம் அங்கீகரிக்க மறுத்தபோதிலும், அதனைத் தாம் அங்கீகரித்ததாக தமது பெயரில் மோசடி செய்து வெளியிட்டதாகவும் கணக்காளர் நாயகம் குற்றம் சாட்டியிருக்கிறார்,

அமெரிக்காவிடம் இருந்து தங்கம் வாங்கிய வகையால் அபரிமிதக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருப்பது உட்பட மத்திய வங்கியின் மற்றும் பல முறைகேடுகளையும் திரு. ஏப்பா தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். [அ]

### வறுமை நிவாரணம்; அரச அதிபர்களுக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, ஏப். 2

தமிழ் சிங்களப் புதுவருடத்தை முன்னிட்டு, அதற்கு முன்னர் ஏழாவது கட்ட வறுமை நிவாரண உணவு முத்திரை விநியோகத்தை மேற்கொள்ளுமாறு அரச அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

இந்த விநியோகம் ஏப்ரல் முதல் வாரத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எனவே அதற்கான ஆலோசனைகளை மேலதிக அரச அதிபர்களுக்கு வழங்க வறுமை நிவாரண ஆணையாளர் திருமதி பி. கே. குணவர்த்தன அரச அதிபர்களைப் பணித்துள்ளார். (ஒ - த)

## மரண அறிவித்தல்

### செல்வி. ப. துசாந்தி

(யாழ். இந்து மகளிர் கல்லூரி, ஆண்டு 6 மாணவி)

பஞ்சாட்சரலிங்கம் [கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்], உதயகலா ஆகியோரின் அருமை மகள் துசாந்தி 01-04-1992 இல் காலமாகி விட்டார். இவர் கிரிசாந்தி, கோபிரமணன், கோபிராஜ் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற ஆறுமுகம் மற்றும் கனகம்மா, சண்முகசுந்தரம், பரம்சோதி ஆகியோரின் பேத்தியும், பத்மநாதன், கமலேஸ்வரி, பரம்சோதி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் மருமகளும், சுந்தரலிங்கம், மகேந்திரலிங்கம், ஜெயக்குமார், சூரியகலா, சந்திரகலா, சசிகலா, பத்மகலா ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் செம்மணி மயானத்தில் இன்று (02-04-1992) பிற்பகல் 4-00 மணிக்கு நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;

பஞ்சாட்சரலிங்கம்.
(தந்தை)

49, மூத்தவிநாயகர் வீதி,
1 ஆம் ஒழுங்கை,
கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

(20323)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 292/1 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 2-4-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org